# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. No.3/2017 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.1 |
| Name : | | கலைசெல்வி |
| Father's/Husband Name: | | சிவகுமார் |
| Village : | | உடும்பியம் |
| Taluk : | | வேப்பந்தட்டை |
| Age : | | 38 /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.03.2022.

**முதல் விசாரணை**

நான் உடும்பியத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனக்கு வெங்கனூரை சேர்ந்த சந்திரன் என்பவருடன் திருமணம் நடந்தது. திருமணம் ஆன 7 மாதங்களில் அவர் விபத்தில் இறந்து விட்டார். அந்த திருமணத்தில் எனக்கு ஒரு மகன் உள்ளார். பின்னர் 1999-ம் வருடம் சேலம் மாவட்டம் வீரகனூர் சிவன் கோவிலில் எனக்கும் ஆஜர் எதிரிக்கும் அவரது நண்பர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. இந்த திருமணத்தில் எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. ஒன்றரை வருடம் என்னுடன் குடும்பம் நடத்தினார். பின்னர் ஆஜர் எதிரி நீ ஏற்கனவே திருமணம் ஆனவள் தான் உன்னுடன் வாழ விருப்பம் இல்லை என்று சொல்லி தகாத வார்த்தைகளால் திட்டி கொடுமைப்படுத்தி குச்சி மற்றும் கையில் கிடைக்கும் பொருட்களை வைத்து அடித்து கொடுமைபடுத்தினார். பின்னர் நாங்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எனக்கும் எனது குழந்தைக்கும் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு நடந்தது. விசாரணையின் போது 26.06.2012-ம் தேதி காலை 9.45 மணியளவில் நான் உடும்பியத்தை சேர்ந்த முனியாண்டி வீரகனூரை சேர்ந்த பழனிமுத்து ஆகியோர் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்திருந்தோம். விசாரணைக்கு பின்னர் திரும்ப ஊருக்கு செல்வதற்காக பஸ் ஸ்டான்ட் செல்வதற்காக எம்.ஜி.ஆர் சிலை அருகே சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி என்னை வழிமறித்து எனக்கு எதிராக எப்படி சாட்சி சொல்லலாம் என தகாத வார்த்தையால் திட்டி கழுத்தை பிடித்து நெறித்து முடியை இழுத்து சீலையை பிடித்து இழுத்து கீழே தள்ளி உடம்பில் உதைத்தார். முனியாண்டி வந்து விலக்கிவிட்ட போது அவரையும் எதிரி கண்ணத்தில் அடித்து சாட்சி சொல்ல வர கூடாது என கொலை மிரட்டல் விடுத்தார். எங்களுக்கு கொஞ்சம் முன்னால் சென்ற

பழனிமுத்து வந்து எங்களை விலக்கி விட்டார். மயக்க நிலையில் இருந்த என்னை இருவரும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தார்கள். அங்கு 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்த போது 28.06.2012–ம் தேதி காலை போலிசார் என்னிடம் வந்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார். நான் சொல்ல சொல்ல அவர்கள் எழுதி கொண்டு என்னிடம் படித்து காட்டினார். நான் கையெழுத்து செய்தேன். புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.